**தலைப்பு 302 – கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 302 – கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 03 ஆம் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

ஆணைக்குழுவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 15.24 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 14.26 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 0.98 மில்லியன் அல்லது 6.43 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 14.10 | 13.27 | 0.83 | 5.89 |
| மூலதனம் | 1.14 | 0.99 | 0.15 | 13.16 |
| மொத்தம் | **15.24** | **14.26** | **0.98** | **6.43** |

### 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவின் 30201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 1.59 | 0.35 | 0.39 | 0.57 | 5.00 | 1.73 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

ஆணைக்குழுவின் கீழுள்ள கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,878 கட்டுநிதி மீதி காணப்பட்டது.

### 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.1.1 பாதீட்டு முரண்

05 செலவின விடயங்களிற்கு மிகை நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதி ஏற்பாடுகளில் 40 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான வீச்செல்லையில் காணப்பட்டது.

### 3.2 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி ஆணைக்குழுவின் செயன்முன்னேற்றம் மீதான அவதானிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

கூட்டுறவு ஊழியர்களிற்காக புதிய ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல் 2006 ஆண்டிற்கான திட்டத்தின் பிரதான பணியாக காணப்பட்ட போதிலும், 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அப் பணியினை அமுல்படுத்துவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.

**3.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

ஆணைக்குழுவிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்வரும் கணக்காய்வுப் பந்திகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தியின் இலக்கம் | |
| 2014 | 6 | ஓய்வூதிய முறை அமுல்படுத்தப்பட்டிருக்காமை |
| 2014 | 6 | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை மற்றும் செயலாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாமை |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 01 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 14 | 09 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 06 | 04 | 02 |
| | மொத்தம் | 23 | 14 | 09 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்காக 2013 ஆம் ஆண்டு முதல் வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவர் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அப்பதவிக்காக நிரந்தர செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.